# கொவிட்-19 காலப் பகுதியில் க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் கற்பதில் எதிர்கொண்ட சவால்கள்: கஹட்டோவிட்ட அல்-பத்ரிய்யா மகா வித்தியாலத்தை பாடசாலையை மையப்படுத்திய ஆய்வு

# Challenges in learning faced by G.C.E. O/L students during COVID-19: a research based on Al-Badriya Maha Vidyala, Kahatowitta

M.J.F. Sana Anjum[1], J.F. Jesla[2], M.E. Randha[3]
[1,2&3] Department of Arabic Language, FIA, SEUSL
fathimasanaanjum@gmail.com, jesla.islahi@gmail.com, randhaeisa4@gmail.com

**ஆய்வு சுருக்கம்**

மாணவர்களின் அடைவுகளை அறிந்துகொள்வதற்காக பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் ஒவ்வொரு தரத்தையும் உயர்த்தி செல்வதற்காகவே கல்வி அமைச்சினால் சரியாக திட்டமிடப்பட்ட பாடத்திட்டத்துடன் கூடிய பொதுப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இம்முறை COVID 19 காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதோடு மட்டுமல்லாமல் பொதுப் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துவதிலும் சிரமம் ஏற்பட்டு தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை மாணவர்கள் மத்தியில் பல சவால்களை உருவாக்கிவிட்டது. இப்பரீட்சைக்கு தயாராகிய மாணவர்கள் அவர்களுடைய கற்றல் செயற்பாட்டில் எதிர்கொண்ட சவால்களை அடையாளப்படுத்தும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடைந்துகொள்ள இவ்வாய்வானது தொகைசார் அணுகுமுறையுடன் விபரிப்பு ஆய்வுமுறையை பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்விற்காக கஹட்டோவிட்ட அல் பத்ரியா பாடசாலையின் 2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையை எழுதிய மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டனர். 55 மாணவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்படுவதன் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கொவிட் 19 காலப்பகுதியில் மிகவும் சிரமத்தோடு கல்வியை மேற்கொண்டு உளவியல் ரீதியாகவும் தாக்கத்தை எதிர்கொண்டு மாணவர்கள் பரீட்சையை எதிர்நோக்கியுள்ளதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இந்நிலைக்கு மாற்றீடான கல்வியில் புதியதோர் மாற்று வழியையும் கொண்டு வந்து மாணவர்களின் கற்கைக்கு இலகு வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதனை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** கொவிட் 19, பாடசாலை மாணவர்கள், கல்வி, இணையவழிக் கல்வி

## ஆய்வு அறிமுகம்

இன்று உலகளாவிய ரீதியில் கொவிட் 19 பாரிய தாக்கத்தையும் சவால்களையும் அனைத்து மட்டத்திலும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் கூட இது பல்வேறு தாக்கத்தை நாட்டின் சமூகப் பொருளாதார விடயங்களில் ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு நாளும் தினசரி

பத்திரிகைகளில் முதல் தலைப்புச் செய்தியாக ''கொரோனா'' எனும் சொல்லை காண்பது வழக்கமாகி விட்டது. நாட்டின் அன்றாட செயற்பாடுகளில் கூட மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு மிகவும் விரைந்து தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றது.தற்போதைய உலகம் உலகமயமாதலினால் முன்னேற்றமடைந்து வருகின்றது. அனைத்து துறைகளிலும் போட்டிச் சூழல் உருவாகியுள்ள நிலையில் மனித இருப்பை அச்சுறுத்தும் அனர்த்தங்களும் ஏற்படுகின்றன. தற்போது COVID-19 (Corona Virus Disease 2019) சர்வதேச மட்டத்தில் பேரிடர் நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதன் தாக்கம் இலங்கையையும் சூழ்ந்துள்ளது. இலங்கையில் தன் ஆதிக்கத்தை செலுத்தி ஒரு வருடத்தையும் பூர்த்தியாக்கிய நிலையில் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக உலா வந்துகொண்டிருப்பதால் நாட்டின் மக்களே அச்சம் கொண்டு அதற்கு உள்ளாகாமல் முடங்கி வாழ வேண்டிய நிலை உருவாயுள்ளது. இந்நிலை நாட்டின் கல்வி, போக்குவரத்து, தொழில்நுட்பம், வணிகம், பொருளாதாரம் போன்ற அனைத்து துறைகளிலும் பேரிடரை ஏற்படுத்தியுள்ளது (பிரியங்காதூபே, 2020).

குறிப்பாக, கல்வித்துறையில் பாடசாலை நாட்காட்டி ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலேயே கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டு 195-200 நாட்கள் பாடசாலை நாட்களாக கணிக்கப்பட்டிருக்கும். இவ்வரையறுக்கப்பட்ட நாட்களில் பாடவிதானத்தையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் அமுலாக்க வேண்டிய தேவை இலங்கை அரச பாடசாலைகள் அனைத்துக்கும் உண்டு (மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர், 2020).

இம்முறை 194 பாடசாலை நாட்களை கொண்டதாக பாடசாலை நாட்காட்டி வெளியிடப்பட்டது. இதில் மூன்று தவணைக்குமான பாடசாலை நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. எனினும் உலகின் அசாதாரண நிலைமையால் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டு பாடசாலைகள் மற்றும் அனைத்து நிலையங்களும் மூடப்பட்டதால் அனைத்து மக்களும் பெரும் சவால் மிக்க சூழலை எதிர் நோக்கினர். குறிப்பாக, நாட்டை வளமாக்கும் நாளைய தலைமுறைகளாக திகழும் இன்றைய மாணவர்கள் தம் கல்வியை சரியாக கற்பதில் சவால்களை எதிர்நோக்கினர். பின்னர் ஊரடங்கை அகற்றிய போதும் பாடசாலைகளை ஆரம்பிக்கும் நிலை காணப்படவில்லை (மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர், 2020). இதன்காரணமாக, இன்றைய நாட்களில் ஒன்லைன் மூலமான கற்கை முறையே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் வசதி குறைந்த மாணவர்கள் மற்றும் ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் காணப்படும் போது அவர்கள் கல்வியைப் பெறுவதில் பல சவால்களை சந்திக்கின்றனர். இது மாணவர்கள் மட்டுமில்லாமல் பெற்றோர் ஆசிரியர்களுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது (ஹுசைன், 2020).

இதனால் மாணவர்களின் அடைவு மட்டத்தை கணிப்பிட முடியாத நிலை உருவாகியுள்ளது. மேலும் தமது வாழ்வின் அடுத்த கட்டத்தை நகர்த்த காத்திருக்கும் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான கல்வியை வழங்க பாடசாலைகள் அவர்களது தேர்ச்சிக்காக பிரத்தியேக வகுப்புக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துகின்றன. இம்முறை மாணவர்கள் ஒன்லைன் மூலம் கற்க நேரிட்டுள்ளதால் அவர்கள் கல்வியில் திருப்தியை அவர்களால் உணர முடிகின்றதா? என்பது ஒரு வினாவாக உள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டு ஒன்லைன் மூலம் கல்வியை தொடர்ந்த மாணவர்களின் கல்வியில்

ஏற்பட்ட சாதக, பாதக விடயங்களை அறிந்து கல்வியில் மாணவர்களை சரியான முறையில் கற்கச் செய்யும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (ஹுசைன், 2020) எனவே இம்முறை (2020) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய கஹட்டோவிட அல்-பத்ரியா மகாவித்தியாலய மாணவர்களை மையமாகக் கொண்டு அவர்களது கல்வி நடவடிக்கைகளில் எவ்வாறான சவால்களை எதிர் நோக்கினர் என்பதை இவ்வாய்வானது ஆராய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:**

பாடசாலைக் கல்வியில் பிரதான அம்சங்களின் ஒன்றாக க.பொ.த. சாதாரணப் பரீட்சையும் காணப்படுகின்றது. இதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குவது முக்கிய அம்சமாகும். இது வகுப்பறைக் கற்றலின் மூலம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தாலும் அண்மைய வருடங்களில் ஏற்பட்ட கொரோனா தொற்றின் காரணமாக உலக நாடுகள் முடக்கத்திற்கு உள்ளாகின. இதனால், மனித வாழ்வின் செயற்பாடுகள் ஒன்லைன் வாயிலாக மேற்கொள்ளப்பட நிறைவேற்றப்பட வேண்டிய நிர்பந்த சூழல் ஏற்பட்டது. இதனடியாக, பாடசாலை மாணவர்களுக்காக கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளும் ஒன்லைன் மூலமாகவே செயற்படுத்தப்பட்டன. குறிப்பாக, இலங்கையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான வழிகாட்டல்கள் ஒன்லைன் வகுப்புக்கள், வழிகாட்டல்கள் ஊடாகவே நிறைவேற்றப்பட்டன. இதன்போது, மாணவர்கள் இதற்கு பரீட்சயமாகி இல்லாத காரணத்தினால் பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர். இவ்ஆய்வுப்பிரச்சினையை மையமாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

கோவிட்-19 காலப்பகுதியில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதிய மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்களை அடையாளப்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது தொகைசார் அணுகுமுறையுடன் விபரிப்பு ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கஹட்டோவிட்ட அல்-பத்ரியா பாடசாலையில் 2020ஆம் ஆண்டு தரம் 11 இல் கல்வி கற்ற 96 மாணவர்களில் 55 மாணவர்கள் எழுமாதிரியாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு**

கலை மற்றும் கலாசார பீடத்தில் வெளியிடப்பட்ட ஒன்பதாவது சர்வதேச ஆய்வு மாநாட்டில் ஹஸானா (2020) என்பவரால் வெளியிட்ட "covid 19 காலப்பகுதியில் கற்றல் செயற்பாட்டில் உயர்தர மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்: புத்தளம் , கற்பிட்டி பாடசாலை கலைப்பிரிவு மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு" என்ற ஆய்வில் பரீட்சைக்கு தயாராகும் போது எதிர்கொண்ட சவால்களாக, வழங்கப்பட்ட கட்டற்ற சுதந்திரத்தினால் கவனச்சிதரர்கள் ஏற்பட்டது. சினிமா, சின்னத்திரை அதிகமாக பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பெரும்பாலான பாடங்கள் வாட்ஸ்அப் மூலம் நடைபெற்றதால் பூரண தெளிவினை பெற்றுக்கொள்ள முடியாமை, ஆசிரியர்- மாணவர்கள் நேரடி தொடர்பின்மை காரணமாக உடனுக்குடன்

சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள முடியாமை, கவரேஜ் பிரச்சினை போன்றவற்றை முன்வைத்திருந்தனர்.

Muallim journal of social science and humanities என்ற ஆய்வு சஞ்சிகையில் கிறிஷ்னன் (2018) என்பவரால் வெளியிடப்பட்ட ”தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் மெய்நிகர் கற்றல் தளத்தினால் ஏற்படும் சிக்கல்கள்” எனும் ஆய்வில் தொழிநுட்ப அறிவு குறைவாக காணப்படுவதால் அவர்கள் எதிர்கொண்ட சவால்களாக, இணைய வசதிகள் குறைவாக உள்ளன, தொடர்சியாக இணையவழி கற்றலை தொடர்வது கடினம் மற்றும் கணினி வசதிகள் இல்லை போன்ற சவால்களை முன்வைத்திருந்தனர்.

Sri Lanka journal of child health என்ற ஆய்வு சஞ்சிகையில் Editorial,(2020) என்பவரால் வெளியிடப்பட்ட "covid 19 pandemic and school education." என்ற ஆய்வில மாணவர்கள் அதிகமாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கினர். அதன் காரணமாக மாணவர்களின் நிகழ்நிலை கல்வி பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் சுகாதாரம், ஆரோக்கியம் அனைத்தும் பாதிப்படைகின்றன என கண்டறிந்துள்ளனர்.

கலை மற்றும் கலாசார பீடத்தில் வெளியிடப்பட்ட 9 வது சர்வதேச ஆய்வு மாநாட்டில், ஜஹான் (2020) என்பவரால் வெளியிடப்பட்ட " covid 19 தாக்கத்தால் இம்முறை உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள் இணையவழி ஊடாக கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்: சம்மாந்துறை அல்- மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு”. என்ற ஆய்வில் மாணவர்கள் எதிர்கொண்ட முக்கிய பிரச்சினைகளாக கவனத்தை ஒருமித்து கற்க முடியாமை, கவரேஜ் இன்மையால் விரிவுரைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாமை, மேலும் கண் வலி, உடல் சோர்வு ,முதுகு வலி, கழுத்து வலி போன்றவற்றை கண்டறிந்துள்ளனர்.


கலை மற்றும் கலாசார பீடத்தில் வெளியிடப்பட்ட ஒன்பதாவது சர்வதேச மாநாட்டில் பானு (2020) என்பவரால் வெளியிடப்பட்ட ” Covid 19 தொற்றுநோய் காலப்பகுதியில் நிகழ்நிலை கல்வி மூலமாக கற்பித்தல் நடவடிக்கைகளும், பட்டதாரி மாணவர்கள் எதிர்கொண்ட சவால்களும்” எனும் ஆய்வில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளாக, நிகழ்நிலைக்கல்வி பற்றிய அறிவின்மை, தொழிநுட்ப சாதனங்களின் பற்றாக்குறை, கவரேஜ் பிரச்சினை, நோய்கள் ஏற்படல் போன்றவற்றை கண்டறிந்துள்ளனர். இவ்வாய்வின் அனைத்தும் Covid 19 பரவலினால் உயர்தர மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் எதிர்கொண்ட சவால்கள், இணைய கல்வி மூலம் ஏற்படுகின்ற சவால்கள், என்பதை ஆராய்ந்துள்ளது. ஆனால் சாதாரண தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்ற மாணவர்கள் எதிர்கொள்ள சவால்களை, எமது தேடலுக்கு உட்பட்ட வகையில் எந்த ஆய்வுகளும் காணப்படவில்லை. ஆகவே அந்த இடைவெளி நிரப்பும் மூலமாக இவ்வாய்வு இடம்பெறுகிறது.

**கலந்துரையாடல்**

வினைத்திறனும் விளைத்திறனும் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதே எல்லாப் பாடசாலைகளினதும் தூர நோக்காகக் காணப்படுகிறது. இந்த இலக்கை அடைவதில் பொதுப் பரீட்சைகளுக்கு தனியிடமுண்டு. ஏனெனில் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளையும் வைத்தே பாடசாலையின் தரம் மதிக்கப்படுகின்றது. பரீட்சைத் திணைக்களம், க.பொ.த சாதாரண தர பரீட்சையை 01.12.2020 - 10.12.2020 வரை நடாத்த திட்டமிட்டிருந்தது (முஸ்தபா, 2020). எனினும் உலகிற்கே பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா தாக்கம் காரணமாக இப்பரீட்சையை நடத்துவதில் பலத்த சவால்களை முகம் கொடுத்தது. க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் இச்சவால்களை நேரடியாகவே எதிர்கொண்டனர். பொதுவாக, ஒரு மாணவன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராம ˙போது பல சவால்களை முகங்கொடுக்கிறான் என்றவகையில் கொரோனோ பரவல் காலப்பகுதியில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையை எதிர்நோக்கிய மாணவர்களில் 55 மாணவர்களை ஆய்வுக்கு உட்படுத்தி அவர்கள் எதிர்நோக்கிய சவால்களை அறிவதற்காக பின்வரும் வினாக்கள் தொடுக்கப்பட்டது. கோவிட் 19 காலப்பகுதியில் உமது கல்வியை தொடர முடியுமாக இருந்ததா? O/L பரீட்சைக்கான காலப்பகுதி நீடித்தது உமக்கு சாதகமாக அமைந்ததா? கோவிட் 19 காலப் பகுதியில் பாடம் தொடர்பான சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள முடியுமாக இருந்ததா? அதற்காக தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவை? ஒன்பது பாடங்களினதும் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதா?

சவால்களை எதிர்கொள்வதற்கு மாணவர்கள் என்ன என்ன வழிகளை மேற்கொண்டார்கள் என்பதை அறிவதற்காக பின்வரும் வினாக்கள் தொடுக்கப்பட்டது. கல்வியை நிகழ்நிலையில் தொடர்வதற்கான வசதி வாய்ப்புகள் இருந்ததா? நிகழ்நிலை மூலமான கல்விச் செயற்பாடுகளுக்கு உங்கள் பெற்றோர், உடன்பிறந்தவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்களா? நிகழ்நிலை கல்வியில் ஈடுபடுவதற்கான ஸ்மார்ட் போன், இணைய வசதிகளை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்களா? மற்றும் நிகழ்நிலை தொடர்பான சவால்களை அறிவதற்கு, நிகழ்நிலையில் கற்கும் போது உமக்கு பாடங்களை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியுமாக இருந்ததா? நிகழ்நிலை கற்றல் மூலம் உங்கள் கல்வி நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக கருதுகிறீர்களா? நிகழ்நிலையில் காணப்படும் குறைபாடுகள் எவை? நிகழ்நிலையில் கற்கும் போது பாட விடயங்களை முழுமையாக உள்வாங்க முடியுமாக இருந்ததா? போன்ற வினாக்களை தொடுத்ததன் மூலமாக ஆய்வு பிரச்சினையை கண்டறிந்தோம்.


கொரோனா தாக்கத்தினால் உருவான நெருக்கடிகள் காரணமாக மாணவர்கள் அவர்களுடைய கற்றலை மேற்கொள்வதில் அசாதாரண நிலையை எதிர்கொண்டனர். அந்த வகையில் கொரோனா காலப்பகுதியில் பரீட்சைக்கு முழுமையாக தயாராக முடிந்தமை பற்றி வினவிய போது, 40% ஆனோர் ஓரளவு தயாரா முடியுமாக இருந்தது என்றும், 31% ஆனோர் முழுமையாகத் தயாராக முடியவில்லை என்றும், 29% ஆனோர் முழுமையாக தயாராக முடியுமாக இருந்தது என்றும் பதிலளித்தார்கள். இந்தவகையில், பரீட்சைக்கு தயாராவதற்கான திருப்தி நிலை குறைந்தளவான மாணவர்களிடையே காணப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனை வரைபு 1 எடுத்துக் காட்டுகிறது.




வரைபு 1: கல்வியைத் தொடர முடிதல்

அதேநேரம், மாணவர்கள் கொரோனா தொற்றினால் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு கல்வியைத் தொடரும் சந்தர்ப்பத்தில் கூட, பாட ஆசிரியர்களால் தங்களது பாடத்திட்டங்களை முழுமையாக பூர்த்தி செய்யாமல் இருந்தது. எனினும் குறிப்பிட்ட பாடங்களின் பாடத்திட்டத்தை நிகழ்நிலை மூலம் பூர்த்தி செய்தாலும் அதனை மாணவர்கள் விளங்கிக் கொள்வதில் சிரமங்களை முகங்கொடுத்ததாக தெரிவித்தனர். இது பற்றி மாணவர்கள் வினாக்கொத்தில், *"பாடத்திட்டங்கள் நிறைவு செய்யாமையினால், பரீட்சை தொடர்பான மனவெழுச்சியில் எதிர் மனப்பாங்கினைத் எங்களிடையே தோற்றுவித்தது".* என குறிப்பிட்டார்கள். மேலும், கொவிட் 19 இன் முதலாவது அலை தளர்ந்து நாடு சாதாரண நிலைக்கு வரும் என எதிர்பார்ப்புடன், மாணவர்கள் வீடுகளிலிருந்து வெளியே சென்று கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, கொவிட் 19 இன் இரண்டாவது அலை ஏற்பட்டது. இந்த அலை வீச்சின் காரணமாக பரீட்சை திகதி நீடித்தது உமக்கு சாதகமாக அமைந்ததா என்ற வினாவிற்கு 64% ஆனோர் பரீட்சைக்கான காலப்பகுதி நீடித்தது சாதகமாக அமைந்தது என்றும் 36% ஆனோர் சாதகமாக அமையவில்லை என்றும் பதிலளித்தார்கள். இதனை வரைபு 2 விபரிக்கின்றது.



ISBN 978-624-5736-14-0




வரைபு 2: பரீட்சைக்கான கால நீடிப்பு

வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்டதன் ஊடாக, கொவிட் 19 காலப்பகுதியில் பாடம் தொடர்பான உமது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள முடியுமாக இருந்ததா? என்ற வினாவிற்கு, அதிகமானோர் *"தங்களுடைய சந்தேகங்களை தங்களுடைய தேடலின் மூலமும் ஆசிரியர்களுடன் தொலைபேசி அழைப்பு மூலமும் தீர்த்துக் கொண்டோம் என்றும் எமது பிரதேசம் நீண்ட காலமாக முடக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்ததால் வீட்டிலிருந்து சென்று படிப்பதற்கு முடியாமலே இருந்தது."* என்று கூறினார்கள்.


கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்ட கல்வித்துறையை சீர்படுத்த மாகாணக் கல்வித் திணைக்களும், வலயக்கல்வி அலுவலகங்களும், பாடசாலைகளும் இணையவழி கற்றல், மாதிரி கற்பித்தல் காட்சிகள் போன்றவற்றை பயன்படுத்தினர். கிராமப்புறம், நகர்ப்புறம், ஆண்கள், பெண்கள், வசதி, ஏழ்மை போன்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் நிகழ்நிலையில் கல்வியைத் தொடர்ந்தனர். இதனடிப்படையில் நிகழ்நிலையில் கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புகள் இருந்ததா என்று தொடுக்கப்பட்ட வினாவிற்கு 54.5% ஆனோர் ஓரளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தன என்றும் 20% ஆனோர் எந்தவித வசதி வாய்ப்புக்களும் காணப்படவில்லை என்றும் 25.5% ஆனோர் மாத்திரமே நிகழ்நிலையில் கல்வியைத் தொடர்வதற்கு வசதி வாய்ப்புகள் இருந்தன என்றும் கூறினர். இதனை வரைபு 3 காட்டுகிறது.




வரைபு 3: கற்பதற்கான வசதிகள்

நிகழ்நிலையில் கல்வியை தொடர்வதற்கு எவ்வாறு இணைய வசதிகளை பெற்றுக் கொண்டீர்கள் என்ற வினாவிற்கு மாணவர்களில் 70.9% ஆனோர் தந்தையிடம் இருந்து என்றும் 25.5% ஆனோர் உறவினர்களிடம் இருந்தும் என்று கூறினார்கள். இவ்வாறு நிகழ்நிலை மூலம் கல்வியைத் தொடர்ந்த மாணவர்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களிடம் நிகழ்நிலையில் கற்கும்போது பாட விடயங்களை முழுமையாக உள்வாங்க முடியுமாக இருந்ததா என்ற வினாவிற்கு 60% ஆனோர் பாட விடயங்களை முழுமையாக உள்வாங்க முடியவில்லை என்றும் 31% ஆனோர் பாட விடயங்களை ஓரளவு உள்வாங்கிக் கொள்ள முடியுமாக இருந்தது என்றும் 9% ஆனோர் தான் பாட விடயங்களை முழுமையாக உள்வாங்க முடியுமாக இருந்தது என்றும் பதிலளித்தார்கள். இதனை வரைபு 4 விபரிக்கின்றது.

வரைபு 4: கற்பிக்கும் போது விளங்கிக் கொள்ள முடிதல்





நிகழ்நிலையில் கல்வியைத் தொடர்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றி வினாக்கொத்தில் வினா எழுப்பிய போது, *ஆசிரியர்கள் எமக்கு கற்பிப்பதும் எம்முடன் கதைப்பதும் சிறிது நேரம் கழித்த எம்மை வந்தடையும். அதன்போது ஸ்கிறீன் இல் இருப்பதும் ஆசிரியர் கதைப்பதும் வித்தியாசமாக இருக்கும் அதன்போது பாடத்தை விளங்கிக்கொள்வது மிகப்பெரும் சிரமமே! மற்றும் கணிதப் பாடத்தில் தேற்றம், திரிகோண கணிதம், மடக்கை போன்ற பாடங்களை நிகழ்நிலையில் கற்பது பெரும் கடினமே!* என்று கூறினார்கள் இன்னும் சில மாணவர்கள், எம்மை ஈர்க்கக்கூடிய இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்துவதால் கல்வியில் மட்டும் கவனம் குவித்து படிப்பது கடினமாக காணப்படுகின்றது. சமூகவலைத்தளங்களில் இருந்து குறுஞ்செய்திகள் வரும் போது எமது சிந்தனையை சிதறுகின்றது. மேலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நேரடித் தொடர்பு இன்மையால் எங்களுடைய சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. இடைவெளி இல்லாமல் தொடர்ச்சியாக இணைய சாதனங்களை பயன்படுத்தும் போது கண் நோவு, தலை வலி, இடுப்பு வலி போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொண்டோம் என்றும் மேலும் பாடத்தை தொடரும்போது அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறுகள் நிகழ்கின்றன அதுவும் தங்களுக்கு ஒரு தடையாகவே இருந்தது என்றும்

கூறினார்கள். ஜஹான்இ பானு போன்றவர்கள் அவர்களது ஆய்வில் கண்டறிந்ததைப் போன்று இவ்வாய்விலும் மாணவர்கள் பல பிரச்சினைகள் எதிர்நோக்கியது கண்டறியப்பட்டுள்ளது.

நிகழ்நிலை கல்வியை கடின உழைப்பாலும், தொடர் முயற்சியாலும் வெற்றிகரமாக அமைத்துக்கொள்ள முயற்சிகள் எடுத்தாலும் நிகழ்நிலை கல்வியில் தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் இணைய வேகம் நகர, கிராம புறங்களுக்கு இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்னும் சில தொலைத் தொடர்பு நிறுவனங்களின் இணைப்புக்கள் இலங்கையில் எல்லா பிரதேசங்களுக்கும் வழங்கப்படாமல் உள்ளது. இதனடிப்படையில் மாணவர்கள் எதிர்கொண்ட கவரேஜ் பிரச்சினை ஆனது ஈடுசெய்ய முடியாத ஒரு பிரச்சினையாகவே காணப்பட்டது. ஹஸானா தனது ஆய்வில் கண்டறிந்ததைப் போன்று இவ்வாய்விலும் மாணவர்கள் பல பிரச்சினைகள் எதிர்நோக்கியது கண்டறியப்பட்டுள்ளது. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் படிஇ நிகழ்நிலை கல்வியை தொடர்வதற்கான ஸ்மார்ட் போன், இணையம் போன்ற சாதனங்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள் என்ற வினாவிற்குஇ கல்வியைத் தொடர்வதற்காக கடன் பெற்று தொழிநுட்ப சாதனங்களை கொள்வனவு செய்தாலும் அதற்கான இணைய இணைப்பு வசதிகளை பெற்றுக்கொள்வது மிகப்பெரிய சவாலாக இருந்தது மாத்திரமன்றி தமது தொலைபேசிகளின் நினைவகம் ஆனது குறைவாகவே காணப்படுகிறது. ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதர, சகோதரிகள் அந்த தொலைபேசியிலே அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை தொடர்வதால், கற்றலுக்காக வழங்கப்படுகின்ற கையேடுகளை சேமிப்பதில், வகுப்பு பதிவுகளை சேமிப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டதாக பதிளலித்தனர்.

வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் என்ற நேரடி கற்றலை தொடர்ந்த மாணவர்கள் திடீர் என்று நிகழ்நிலை கற்றலை தொடரும்போது அவர்களுடைய கல்வி நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டதா என்ற வினாவிற்கு 58% ஆனோர் ஆம் எமது கல்வி விடயங்களில் பின்னடைவு ஏற்பட்டது என்றும் 33% ஆனோர் ஓரளவு பின்னடைவு ஏற்பட்டது என்றும் 9% ஆனோரே பின்னடைவு ஏற்படவில்லை என்றும் தெரிவித்தனர். இதனை வரைபு 5 விபரிக்கின்றது.

வரைபு 5: கற்றலில் பின்னடைவு ஏற்படல்





ISBN 978-624-5736-14-0

2019இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 73.84% மானோர் உயர் தரத்திற்கு தகுதி பெற்றிருந்தனர். ஆனால் இம்முறை பரீட்சை பெறுபேறுகளில் நிச்சயம் மாற்றம் நிகழும் என கல்வியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர் (முஸ்தபா, 2020). இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் க.பொ.த சாதாரண தர பரீட்சையை எழுதிய மாணவர்கள் எதிர்மறை சிந்தனையுடன் இருப்பதை அவதானிக்க முடிந்தது. கல்வியிலும் எதிர்கால இலக்குகளிலும் இருந்த நம்பிக்கை இழப்பு, பரீட்சையில் வெறுப்பு, கல்வியை தொடர விருப்பமின்மை, மன உளைச்சல், விரக்தி, பதகளிப்பு போன்ற தாக்கங்களுக்கு உள்ளாகி இருப்பதாக தெரிவித்தனர். மேற்கூறப்பட்ட கண்டறிதல்களின் அடிப்படையில் கஹட்டோவிட்ட அல்-பத்ரியா மகா வித்தியாலயத்தை சேர்ந்த க.பொ.த சாதாரண தர மாணவர்கள் அவர்களுடைய கற்றல் செயற்பாட்டில் பாரிய சவால்களுக்கு எதிர்கொண்டே சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா நோயினால் மனிதன் அன்றாட வாழ்வில் கூட பாரிய சிக்கலை எதிர்நோக்குகின்றான். கல்வி, பொருளாதாரம், மருத்துவம் போன்ற அனைத்திலும் சிரமத்தை சந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கல்வித் துறையில் பாடசாலைகள் மூடப்பட்டதால் மற்றும் பாடசாலை கல்வியின் தரம் கிடைக்கப் பெறாததால் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளின் மந்த நிலையினை அவதானிக்க முடிகின்றது. இதனால், சரியான முறையில் தொடர்ச்சியாக கல்வியைப் பெற முடியாத நிலையை இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது. மேலும் மாணவர்களின் மனோநிலையும் இக்காலப்பகுதியில் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. தொடர்ச்சியான விடுமுறை காரணமாக கல்வியை மீண்டும் தொடர விருப்பமின்மையும் அவர்களிடத்தில் அவதானிக்க முடிகின்றது. இந்தநிலையை மாற்றுவதற்கான மாற்றீட்டு வழிமுறைகளை கல்வி நிறுவனங்களும், நலன்புரி அமைப்புக்களும் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

பானு ரிஸ்லா எம்.எச், (2020). Covid 19 என்ற தொற்று நோய் காலப்பகுதியில் நிகழ்நிலை கல்வி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளும், பட்டதாரி மாணவர்கள் எதிர்கொண்ட சவால்களும்: தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தில் இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு, 9th International symposium,SEUIARS.

ஜஹரான் நாதிரா , ஆகில், எஸ். இ சபீஹா, ஏ.எம்.எம் (2020). Covid-19 தாக்கத்தால் இம்முறை உயர்தர பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்கள் இணையவழி (online) ஊடாக கற்பதில் எதிர் கொள்ளும் சவால்கள்: சம்மாந்துறை பிரதேசத்தின் அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவர்களை மையமாகக்கொண்ட ஆய்வு. *9th International Symposium*, SEUIARS.


ISBN 978-624-5736-14-0

கிறிஷ்னன் ஷாலினி, (2018). தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் மெய்நிகர் கற்றல் தளத்தில் ஏற்படும் சிக்கல்கள், Journal of Muallim journal of social science and humanities, (p 265- 276)

ஹஸானா,பீ, நவாஸ்,ஏ.என்.எம் , ஆயிஷா (2020). கோவிட் -19 காலப்பகுதியில் கற்றல் செயற்பாட்டில் உயர்தர மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்: புத்தளம் கல்பிட்டி பாடசாலை கலைப்பிரிவு மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. *9th International Symposium*, SEUIARS.

Editorial. (2020). COVID-19 pandemic and school education. *Sri Lanka Journal of Child Health* 2020; 49(3): 207- 209. DOI: http://dx.doi.org/10.4038/sljch.v49i3.9135.

Priyadarshani, HDC, and D. Jesuiya. Teacher’s Perception on Online Teaching Method during Covid-19: With Reference to School Level Teachers at Faculty of Education, The Open University of Sri Lanka. *Shanlax International Journal of Education*, vol. 9, no. 2, 2021, pp. 132-140.

Rameez, Aboobacker & Fowsar, Mohamed Anifa & Noohu, Lumna. (2020). Impact of Covid-19 on Higher Education Sectors in Sri Lanka: A Study based on South Eastern University of Sri Lanka. 10.36941/jesr-2020-0132.

Shelar, Rohit & Maji, Saikat & Singh, A.K.. (2020). Difficulties in e-learning faced by indian students during covid-19 pandemic. Journal of Global Communication. 13. 89-100. 10.5958/0976-2442.2020.00014.2.

Solihat, Dadang & Fahly, Fahrus & Suhartini, Cucu & Agustina, Vina. (2021). Learning Readiness by Middle School Students during Covid-19 Pandemic. 10.4108/eai.12-12-2020.2304973.

இணையப் பக்கங்கள்:

ஐரீன் நியூஸ். (2020). கொரோனா வைரஸ்தாக்கம் காரணமாக சர்வதேச ரீதியில் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்பு. https://www.itnnews.lk/ta/2020/03/13/231631/.

கல்வி அமைச்சு. (2020). கொவிட் 19 பரவலை தடுப்பதற்கு பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களை தயார்படுத்துவதற்கான சுற்று நிறுபம் மற்றும் வழிகாட்டல் கையேடு. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://moe.gov.lk/w.

பிரியங்கா தூபே. (2020). கொரோனா வைரஸால் மாறிய கல்வி. இணையம் இல்லாத மாணவர்களின் எதிர்காலம் என்ன?. https://www.bbc.com/tamil/india-53198344

மட்டக்களப்பு வலயப் கல்வி பணிப்பாளர்.(2020). மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை. http://www.battinews.com/2020/03/blog-post_355.html

முகம்மது ஹுசைன். (2020). கொரோனாவும் கல்வியும்: விடுமுறையை பயனுள்ளதாக்கும் இணையவழிக் கல்வி. https://www.hindutamil.in/news/supple ments /thisai-katti/545878-corona-virus.html.

முத்துமாரி, எம். (2020). கொரோனாவால் முடங்கிய கல்வி.. https://www.google.com/amp/s/tamil.samayam.com/education.

ஷரீபா, முஸ்தபா. (2020). தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் கல்வி நிலை எதிர்நோக்கியுள்ள சவால்கள்.. https://yourstory.com/tamil/coronavirus-schools.

ஷரீபா முஸ்தபா. (2020). பொதுப் பரீட்சைகளை நடாத்துவதில் உள்ள சவால்களும் மாணவர்களின் எதிர் காலமும். http://www.teachmore.lk/2020/07/blog-post_29.html.


ISBN 978-624-5736-14-0